முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

—வார இதழ்—

முரசு 5 | 13-6-58 | வெள்ளி | ஒலி 9

மீண்டும் ஒரு விடுதலை முகாம் - லெபனானில் தேசிய எழுச்சி!

லெபனான்—தேசிய எழுச்சி கொழுந்துவிட்டெரியும் நாடுகளுள் இதுவும் ஒன்று!

அங்கே கெமிலிகாமௌன்—என்பவர் ஜனாதிபதியாக இருக்கிறார். அவரது தலைமையில் ஒரு பிற்போக்குவாதிகளின் அரசாங்கம் இயங்கி வருகிறது.

மேலை வல்லரசுகள் அத்தனையும் அவரது அரசாங்கத்தை ஆட்டி வைக்கின்றன.

உண்மையில் பார்க்கப் போனால் லெபனான் முழுவதும் அவரது ஆட்சிதான் நடைபெற்று வருகிறது.

ஆனாலும் அங்கே டிரிபொலி என்ற பெயரில் தலைநகருக்கு அடுத்த பெரிய நகரமொன்று இருக்கிறது.

அங்கேதான் விடுதலை வீரர்கள் சபா மண்டபம் நிறுவி ஆட்சி செலுத்தி வருகிறார்கள்.

அவர்கள் தொகை லெபனான் அரசாங்கத்தின் கைவசம் இருக்கும் சிப்பாய்களைவிட அதிகமாக இருக்கிறது.

—இந்த ரகசியம் ஆட்சி பீடத்திலிருக்கும் பிற்போக்கு வாதக் கும்பலுக்கும் தெரியும்.

அதனால்தான் அந்தக் கும்பல் எப்படியாவது மேலை வல்லரசுகளை நுழைத்துவிட வேண்டும்; புரட்சிக்காரர்களை அடக்கிவிட வேண்டும்—என்று முயன்று வருகிறது.

அரசாங்க வீரர்கள் நகரம் முழுவதும் வலம் வந்த வண்ணம் இருக்கின்றனர். கவசம் அணிந்த மோட்டார்களில் ஆயுதம் தாங்கிய வீரர்கள் மக்களை வேட்டையாடுகின்றனர். என்றாலும் புரட்சி வீரர்களும் தக்க ஆயுதங்களோடு தான் இருக்கின்றனர். எந்த நிமிடம் போர் மூளுமோ என்ற பீதி மக்களிடம் பரவி இருக்கிறது.

சாகேப் சலாம் என்பவர்தான் லெபனான் புரட்சிக்குத் தலைமை வகிக்கிறார்.

லெபனான் விடுதலை கேட்கிறது!

யாரிடமிருந்து?

பதவியிலிருக்கும் பிற்போக்குக் கும்பல் லெபனானை அமெரிக்கர்களிடம் ஒட்டு மொத்தக் கூட்டாக அடகு வைத்துவிட்டதல்லவா—அவர்களிடமிருந்து!

லெபனானை ஆளும் கெமலிகா மௌன்-மாலிக் ஆகிய இருவரும் அமெரிக்கரின் தாள் பணிந்து விட்டனர்; அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் சூத்திரதாரிகளின் கைப்பாவையாகிவிட்டனர். அவர்களின் நேரிடையான அதிகாரம் லெபனானின் ஆட்சியில் கோலோச்சுகின்றது. அவர்களின் தூதர்கள் இந்த நாட்டின் 'தலைவிதி'யை நிர்ணயிக்கும் தேவர்களாகி விட்டார்கள்.

அதனால்தான் அவர்கள் அமெரிக்கப் பாம்பின் வாயிலிருந்து மீண்டு; தாங்கள் அராபிய தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நிலைநிறுத்த வேண்டுமென்று போரிடுகிறார்கள்!

புரட்சிக் கனல் கொழுந்து விட்டு எரிகிறது. உடல்-பொருள்-ஆவி-தந்தேனும் தாயகத்தைக் காப்போம் என சூளுரைத்து மக்கள் அணி அணியாகத் திரண்டிருக்கின்றனர், சாகெப் சலாம் தலைமையில்.

அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு; உடல் தந்து; பொருள் தந்து; இறுதியில் ஆவியையும் ஈந்துவிட்ட விடுதலை வீரன் ஒருவனது பிணம் தான் கீழேயிருப்பது!

லெபனானிலே அராபிய தேசிய உணர்ச்சி கொழுந்து விட்டு எரிகிறது!

இந்த சுதந்திர யுத்தத்திற்கு ஆட்சி பீடத்திலிருப்போர் மதப் போர்வையைப் போர்த்தி, விடுதலைப் படையில் பிளவை உண்டாக்க சூழ்ச்சி செய்யலாயினர். ஆனால் அப்படையில் பலவேறு மதத்தைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றிருக்கின்றனர். இது ஒரு தேசிய முகாம்-ஆட்சியாளரின் ஆணவத்தை எதிர்க்க எழுந்த விடுதலைச்சேனை! லஞ்சம் ஊழல் அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராக போர் முரசு கொட்டும் வீரப்படை!

அந்தத் தேசிய உணர்ச்சி—என்கிற அணைக்க முடியாத தீ மூண்டுவிட்டால் ஆதிக்கவாதிகள் அழிய வேண்டியதுதானே!

லெபனான் தேசிய உணர்ச்சிக்கு நமது மரியாதையும் வணக்கமும் என்றும் உண்டு.

தேசிய எழுச்சிக்கு இன்னுயிரை விலையாகத் தந்துவிட்ட லெபனான் தேசத்தான்!

ஜனநாயகமும் தனிமனிதன் உரிமையும்

பி.சி. கணேசன். பி.எஸ்ஸி.பி.டி

எந்த அரசியல் முறையின் லட்சியமும் மனித சமுதாயத்தின் நல் வாழ்வாகத்தான் இருக்க முடியும். ஆனால், அப்படி மனித சமுதாயத்தின் நலவாழ்வைப் போற்றிப் பாதுகாக்கும் அரசியல் முறை தனி நபரின் உரிமை வாழ்வுக்கு உலை வைக்குமானால், அதை முழுமை பெறாத அரசியல் முறையாகவே அறிஞர் கருதுவர். தனி நபரின் உரிமைகள் மறுக்கப்படாத நிலையில் சமுதாய வாழ்வில் முன்னேற்றம் காண முயல்வது சமுதாய வாழ்க்கையை யந்திர நிலைக்குக் கொண்டு சென்றுவிடும்.

வரலாற்றைத் துருவிப் பார்க்கின்றபோது, தனி மனிதர்கள் சிலரின் அபூர்வமான அறிவாற்றலாலேயே மனித நாகரிகம் வளர்ந்து வந்திருப்பது தெளிவாகப் புலப்படுகிறது. ஆர்க்கிமிடீஸ், சாக்ரடீஸ், புத்தர், வள்ளுவர் காலத்திலிருந்து இன்றுவரை, எந்த ஒரு துறையிலும் தனி நபரின் முயற்சியாலேயே தெளிவும் வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. தனி நபரான கலீலியோவின் சிந்தனை விஞ்ஞான உலகில் புது சகாப்தம் ஒன்றை உருவாக்கியது; பிளேட்டோவின் சிந்தனை முறையான அரசியலுக்கு அஸ்திவாரமிட்டது; ஏசு நாதரின் சிந்தனை மக்களை அன்பு வழியில் திருப்பிற்று; கார்ல் மார்க்ஸின் கருத்துக்கள் பொருளாதாரத் துறையில் புதிய கண்ணோட்டம் அளித்தது. இப்படியாக எத்துறையிலும் தனி நபரின் அறிவுச் சக்தி புதுப் புது மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே ஒரு நல்ல அரசியல் முறையின் முதல் குறிக்கோள் ஒவ்வொரு தனி நபரின் அறிவும் ஆற்றலும் தடைபடா நிலையில் முழு வளர்ச்சி அடையச் செய்வதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையமைய பூரண அரசியல் சுதந்திரம் மக்களுக்குத் தேவை. எண்ண, எழுத, எடுத்துச் சொல்ல — தான் சரியென உணர்வதைப் பிறருக்கு உணர்த்த — மக்களுக்கு உரிமைவேண்டும். இந்த உரிமை நிலைக்க வேண்டுமானால் நல்ல ஜனநாயக முறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

துரதிர்ஷ்ட வசமாக, (காங்கிரஸ் கொள்ளைக்காரர்களைப் பொறுத்த மட்டில் அதிர்ஷ்ட வசமாக) இந்தியத் துணைக் கண்டத்தில் வலுவான பெரும்பான்மைக் கட்சியாக, கேரளம் தவிர எல்லா மாநிலங்களிலும், மத்திய அரசாங்கத்திலும் காங்கிரஸ் கட்சி விளங்கி வருகிறது. இந்த நிலையைப் பயன்படுத்தி நாட்டின் நலனில் உண்மையிலேயே காங்கிரஸ் கட்சி அக்கறை கொண்டிருந்தால், பிற்போக்கு வாதிகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்திருக்க முடியும். ஆனால், பரிதாபத்துக்குரிய காங்கிரஸ் கட்சி, தானே பிற்போக்குவாதிகளின் ஸ்தாபனமாகிவிட்டதோடுகூட முற்போக்கு சக்திகளை எள்ளி நகையாடத் தொடங்கி, அவைகளின் வளர்ச்சியை நசுக்கப் புதுப்புது சட்டங்களையும் இயற்றத் தொடங்கியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த கட்சி, ஏகாதிபத்தியக் கட்சியாகவே மாறியது.

யுத்த காலத்தில், பிரிட்டிஷார் இங்கே ஆண்டபொழுது, இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழ், யுத்த எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ததற்காக நேரு போன்ற பெருந் தலைவர்கள் கைது செய்யப்பட்டு நீண்ட சிறை வாசம் அளிக்கப்பட்டவுடன், காங்கிரஸ் கமிட்டிகள் கண்டன மழை பொழிந்தன.

காலம் யுத்த காலம் — செய்த பிரச்சாரமோ யுத்த எதிர்ப்பு! இதற்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்ததையே பலமாக எதிர்த்த காங்கிரஸ்காரர்கள் இப்போது செய்வதென்ன? அரசியல் எதிரிகளை நசுக்க, விசாரணையின்றி சிறையில் தள்ளும் தடுப்புக் காவல் சட்டம் அமுல் செய்யப்படுகிறது.

இவ்வளவு பெரும்பான்மை பலத்துடன் ஆளுகின்ற கட்சி, இந்தச சட்டத்தின் துணையை நாடவேண்டிய அவசியமே இல்லை. பின் ஏன் இந்த ஆள் விழுங்கிச் சட்டம்? எதிர்க் கட்சிகளின் செயல் உரிமைகளைத் தடுப்பதைத் தவிர, இதற்கு வேறு நோக்கம் இருக்க முடியாது.

தவிர, ஜனநாயக ஆட்சி முறையில் நீதிஸ்தாபனங்களின் உரிமைகளைப் பிடுங்கி, அவற்றைச் செயலற்றுப் போகும்படிச் செய்வது மறைமுகமாக சர்வாதிகார ஆட்சிக்கு வழிகோலுவதாகும். விசாரணையின்றி ஒருவரைச் சிறையில் அடைக்கும் உரிமையை ஆளுவோர் தங்களுக்கு உண்டாக்கிக் கொண்டால், ஆட்சியாளரின் அநீதி பற்றி நீதி ஸ்தாபனங்களிடம் முறையிட்டு நீதி பெறும் உரிமையைக் குடிமக்கள் இழக்கிறார்கள்; நீதி வழங்கும் சக்தியின் நீதி ஸ்தாபனங்கள் இழக்கின்றன. ஜனநாயகம் தனது அடிப்படைப் பண்பையே இழக்கிறது.

ஜீவாதார உரிமைகளையும் கொடுத்துவிட்டுத் தடுப்புக் காவல் சட்டத்தையும் அமுல் செய்வது ஜனநாயக உலகம் கண்டறியாத முரண்பாடாகும்!

வெளி உலகிடம் காட்டிப் பெருமை பேச ஜீவாதார உரிமைகளையும், உள்நாட்டில் மாற்றுக் கட்சிகளை ஒடுக்கத் தடுப்புக்காவல் சட்டத்தையும் இயற்றி வைத்திருக்கின்ற அரசாங்கம் நல்ல ஜனநாயக அரசாங்கமாக இருக்க முடியாது.

இப்படிப்பட்ட ஆட்சியில் புது எண்ணங்கள் வளர வழியில்லை. தனி நபர், அரசியல் சட்டப்படி உரிமை பெற்றிருப்பதுபோல் தோன்றினாலும் உண்மையில் உரிமை பெற்றிருக்கவில்லை. நடப்பதெல்லாம் வெறும் நடிப்பு ஜனநாயகம்!

அதுமட்டுமல்ல; கட்சிக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டிய கவர்னர்களும், சபாநாயகர்களும், கட்சி உணர்வோடு செயல்படுகின்றனர். பாராளு மன்ற சபாநாயகர், மதிப்பிற்குரிய அனந்தசயனம் அய்யங்கார் மயிலையில் ஒரு கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரையும் முதுபெரும் அரசியல் அறிஞர் ஒருவரையும் பலமாகத் தாக்கிப் பேசி இருக்கிறார்.

பார்க்குமிடத்து இங்கு ஜனநாயக நல்லுணர்வுகள் சரியாக வளர்க்கப்படவில்லை. குடிமக்கள் முழுமையான அறிவு வளர்ச்சியும் மன வளர்ச்சியும் அடைவதற்கான சூழ்நிலைகள் உண்டாக்கப்படவில்லை. ஏட்டிலே ஜனநாயகம் மெருகு குலையாமல் இருக்கிறது. பேச்சிலே அதன் நாமாவளி ஜபிக்கப்படுகிறது. ஆனால், நடைமுறையில் ஒரு கட்சியின் யதேச்சாதிகாரம் நடைபெறுகிறது.

தனி மனிதர்களின் வளர்ச்சியால்தான் ஜனநாயகம் பலம் பெறும். தனி மனிதனின் வளர்ச்சி கவனிக்கப் படாததால் — காய் — ஷேக்கின் சீனு அடைந்த கதியை எவரும் மறப்பதற்கில்லை.

ஆங்கில அரசியலின் சிறப்பே அங்கே தனிமனிதர்கள் பெற்றிருக்கும் உரிமைதான். அங்கு உள்ள அரசியல் தலைவர்கள் ஜனநாயகப் பழக்கவழக்கங்களை நிலைநிறுத்தத் தன்னலமற்று உழைக்கின்றனர். வெளிநாட்டில் உரிமை மறுக்கப்பட்ட மக்கள்கூட அந்நிய நாடான ஆங்கில நாட்டில் முழு உரிமையோடு வாழ அனுமதிக்கப்படுகின்றனர்.

மனிதன் இத்துணை நாகரிக வளர்ச்சி அடைந்த பிறகும் அவன் முழு உரிமைபெற்று வளர அனுமதிக்காத அரசியல் முறை எப்படி அரசியல் முறையாகும்?

ஜனநாயக ஆட்சியில் ஓட்டுரிமைபெற்ற எவரும் சிந்திக்க வேண்டிய முதல் அரசியல் பிரச்சினை இது.

சிந்திப்பார்களா?

1958 ஜூன் 22:

இலங்கைத் தமிழர் உரிமைப் பாதுகாப்பு நாள் கொண்டாட வேண்டுகோள்

★

ஒரு சில சிங்களத் தலைவர்களின் தூண்டுதலின் பேரில் இலங்கையில் நடைபெறும் வெறிச் செயல்களுக்கு ஆளாகி அவதியுறும் தமிழர்களின் நிலைக் கண்டு இரங்கவும், அவர்களுக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளவும், நிலைமைகளைத் திராவிட—தமிழகப் பெருங்குடி மக்களுக்கு அறிவிக்கவும், இலங்கைவாழ் தமிழர்களுக்கு நியாயமாக அளிக்க வேண்டிய உரிமைகளை அளிக்குமாறு இலங்கை அரசினரை வற்புறுத்தவும், தங்கள் நல்லுறவைப் பயன்படுத்தி இலங்கை அரசினரை அந்த வழிக்கு இழுக்க ஆவன செய்யுமாறு இந்தியப் பேரரசினரை வற்புறுத்தவும், அந்த வகைக்கு இந்தியப் பேரரசினரைத் தூண்டும்படி சென்னை அரசினரை வற்புறுத்தவும் 22—6—58 ஞாயிற்றுக்கிழமையை 'இலங்கைத் தமிழர் உரிமைப் பாதுகாப்பு நாளா'க் கொண்டு கொண்டாடுமாறு கழகத் தோழர்களையும், ஆதரவாளர்களையும், பொது மக்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் அமைதியான முறையில் நடைபெற தி. மு. கழகக் கிளைகள், ஆங்காங்கு பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானத்தின் நகல் பின்னர் வெளியிடப்பெறும்.

'அறிவகம்'
சென்னை-13
9—6—58

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. க.

வெள்ளி 13-6-58 சென்னை

'பஞ்ச - சீலம்'!

"இந்தியாவிலே வறுமையாலும்; வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் ஏராளமான தற்கொலைகள் நடைபெறுகின்றன; அதோடு பட்டினி கிடக்கும் மக்கள் வேறு பாம்புகளையும், எலிகளையும்; மற்ற அழுகிய பதார்த்தங்களையும் உண்டு ஜீவித்து வருகிறார்கள்!"

—இந்தியாவைப்பற்றி செத்துப்போன கோயபெல்ஸ்தான் உயிர் பெற்று வந்து; கதை கட்டிவிட்டிருக்கிறானோ—என்று நினைக்காதீர்கள்!

இப்படிப் பேசியவர் வேறு யாருமல்லவாம்! சாட்சாத் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் ராஷ்டிரபதி தேபர்ஜிதான் ஜெய்பூரிலே பேசியதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது.

"இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?"—என்று பண்டித நேருவைக் கேட்டபோது அவர் தனக்கு எதுவுமே தெரியாது என்று கூறிவிட்டாராம்!

ஜெய்பூரிலே தான் இப்படிப் பேசியது உண்மை என்றோ; அல்ல என்றோ—இதுவரை அந்தச் செய்தி தேபரால் ஊர்ஜிதப்படுத்தப்படவுமில்லை; நிராகரிக்கப்படவுமில்லை—என்பதை பம்பாய் 'கரண்ட்' பத்திரிகையிலே எழுதும் தோழர் காமத் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தேபரது இந்தக் கருத்து பத்தாண்டு காலக் காங்கிரஸ் ஆட்சியின் பலன் இதுதான்—என்று பட்டயம் வழங்குவதைப் போலத்தான் இருக்கிறது.

தேபரது நோக்கம் காங்கிரஸ்காரர்களை யெல்லாம் கண்டித்துவிட்டு ஓய்வு பெற்றுக்கொண்டிருக்கும் பண்டிதரைப் புண்படுத்துவதாகவுமிருக்கலாம்.

இருந்தாலும் அது உண்மை என்பதை யாரும் மறுக்க முடியாது!

வயிற்றுக்கில்லாத குறையே தற்கொலைகளில் பெரும்பாலானவற்றுக்கு மூலகாரணமாக இருக்கிறது.

அப்படித் தற்கொலை செய்துகொண்டு வேதனைக்கு முடிவு காண்பதற்கான துணிச்சல் இல்லாதவர்கள் எலிகளையும் செத்த பிராணிகளையும்தான் உண்டு வயிறு வளர்க்கிறார்கள்!

நிலைமை இப்படித்தான்—என்பதை தேபர்போன்றவர்கள் ஒப்புக் கொண்டிருப்பது நிலைமை எவ்வளவு பயங்கரமான கட்டத்தை அடைந்திருக்கிறது—என்பதைத்தான் குறிக்கிறது.

இப்படி ஒரு உபகண்டத்தையே மிரட்டிக்கொண்டிருக்கும் உணவு பற்றுக்குறையைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன செய்திருக்கிறது?

1957, ஜூனின் மாதத்திலே கூடிய காங்கிரஸ் கமிட்டி உணவுப் பற்றுக்குறையைப் போக்குவதற்காக பதினெட்டு அம்சத் திட்டமொன்றை நிறைவேற்றியது.

"இரண்டாவது **5**-ஆண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி நிலச் சீர்திருத்தம் எல்லா மாநிலங்களிலும் உடனடியாகச் செய்து முடிக்கப்படவேண்டும்."

—இதுவரையில் இந்த முதல் அம்சமே நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

"இதுவரை பயன்படுத்தப்படாமலிருக்கும் நீர்ப்பாசனக் கால்வாய்கள்; குழாய்க் கிணறுகள்—போன்றவைகளை முழு அளவுக்குப் பயன்படுத்தவேண்டும்."

—இந்தத் திட்டத்தின் கதி என்ன?

நீர்ப்பாசன—மின்சார இலாக்கா அமைச்சர் எஸ். கே. பட்டீல் ஒரு சமயம் பாராளு மன்றத்திலே பேசியிருக்கிறார், விவசாய இலாக்காவிற்கும் தனது இலாக்காவிற்கும் போதமான தொடர்பு இல்லாத காரணத்தால் நீர்ப்பாசன வசதிகளைச் சரியாகப் பெருக்க முடியவில்லை—என்று!

"உணவுப் பண்டங்களை வீணடிக்கும் திருவிழாக்களையும், விருந்துகளையும் தவிர்க்கவேண்டும்."

—அரசாங்கமும்; அமைச்சர்களுமே இதைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை.

"சாகுபடி செய்யக்கூடியவையாயிருந்தும்; இதுவரை சாகுபடிக்குக் கொண்டுவராமலிருக்கிற நிலங்கள் அனைத்தையும்—எவ்வளவு தடைகள் இருந்தபோதிலும் அவைகளையெல்லாம் மீறி—சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டும்."

—இப்படி சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டவை எவ்வளவு ஏகரா நிலங்கள்? நிச்சயம் அரசாங்கம் காட்டுகின்ற கணக்கு உற்சாகமாய் இருக்கமுடியாது!

"அதிகமாக உற்பத்தி செய்கின்ற ஒவ்வொரு கிராமத்திற்கும் பரிசு வழங்கப்படவேண்டும்."

—'கிருஷி பண்டிட்' என்று அதிக உற்பத்தி செய்கின்ற விவசாயிக்குத்தான் பரிசு தரப்பட்டிருக்கிறதே தவிர, அதிக உற்பத்தி செய்த எந்தக் கிராமத்திற்கும் பரிசு தரப்படவில்லை.

"மக்களது உணவுப் பழக்கங்களை மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அரிசியைப் பிரதானமாக உட்கொள்கிறவர்கள் கோதுமையையும் சேர்த்துச் சாப்பிடப் பழகவேண்டும். அதுபோலவே முழுக்க முழுக்கக் கோதுமையைச் சாப்பிடுகிறவர்கள் அரிசியைச் சேர்த்துச் சாப்பிடவும் பழகவேண்டும்."

—எத்தனை காங்கிரஸ்காரர்கள் இதுபோன்ற உணவு முறையைக் கையாளுகிறார்கள்? ஊருக்கு உபதேசம் செய்கிறவர்கள் தங்கள் வீட்டில் எப்போதாவது இம்முறையைப் புகுத்தியதுண்டா?

"வியாபாரிகளும், குடியானவர்களும் உணவு தானியங்களைச் சேர்த்து வைப்பதைத் தடுக்கவேண்டும்."

—இந்த 'வேண்டுகோள் முயற்சி'யில் எந்த அளவு வென்றிருக்கிறார்கள்? மயிலே மயிலே இறகு போடு என்றார்களே—இதுவரை அவர்கள் பெற்றிருக்கும் வெற்றியின் அளவுதான் என்ன?

—காங்கிரஸ் காரியக் கமிட்டியில் நிறைவேற்றப்படும் திட்டங்கள் அமுலாகும் விதம் இதுதான்!

கூடிக் கலைவதும்; காகிதங்கள் அழுக்காவதும்தான் அதன் விளைவுகளாக இருக்கின்றன.

அதனால் பசிக் கொடுமை தாங்கமாட்டாமல் தற்கொலை செய்து கொள்வதும், எலிகளையும் அழுகிப்போன பண்டங்களையும் சாப்பிட்டு வயிறு வளர்ப்பதும் பஞ்சசீலம் பேசும் பண்டிதருடைய இந்தியாவில் சர்வ சகஜமாகிவிட்டது.

உருப்படியான திட்டங்கள் கிடையாது. இருக்கின்ற செல்லரித்துப்போன திட்டங்களையும் அமுலாக்குவதற்குத் திறமை கிடையாது. இவர்கள்தான் பிறரைப் பார்த்து செயலாற்றும் திறனில்லாதவர்கள்—என்று தூற்றுகிறார்கள், பாவம்! ஃ

திருமண அழைப்பு.

அன்புடையீர்!

நிகழும் விளம்பி ஆண்டு ஆனித் திங்கள் **4**—ம் நாள் (**18—6—58**) புதன்கிழமையன்று காலை **10—30** மணி அளவில், எனது மகன் திருவளர்ச் செல்வன் **பெ. இராசமாணிக்கம்** பி. ஏ.வுக்கும் புலியூர், திரு. பி. கந்தசாமி அவர்களின் மகள், திருவளர்ச் செல்வி **வசந்தாவிற்கும்** கரூர் எனது இல்லத்தில், (**3**, குருநாதமுதலித் தெரு) அறிஞர் **அண்ணா** அவர்களின் தலைமையில் நடக்கவிருக்கும் திருமணத்திற்கு தங்கள் சுற்றம் சூழ வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

பி. பெருமாள்.

கண்ணனுக்கே கைவலி எடுத்து களைப்பு மேலிட்ட பிறகே அவன் சிங்காரத்தை அடிப்பதை நிறுத்தினான்.

சிங்காரத்தின் உதடுகளிலேயிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. காதோரத்தில் ரத்தம் பெருகி வழிந்து கொண்டிருந்தது. கன்னமும் நெற்றியும் மளமளவென உப்பி வீங்கிவிட்டன. அசையாமல் நின்றுகொண்டிருந்த அவன் ஒரு சூடான பெருமூச்சால் பூமியில் தூசியைக் கிளப்பிவிட்டு சிறிது நகர்ந்தான். காலை ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. ஆனால் அந்த சிரமத்தை அவன் அவ்வளவு பேருக்கும் நேராகக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. இது போன்ற நெருக்கடி அவனுக்கு எத்தனையோ முறை அவன் தொழிலில் ஏற்பட்டிருக்கிறது.

தீச்சட்டி தூக்கி உற்சாகத்தோடு ஆடிக்கொண்டிருக்கும்போது கை கொப்பளித்துவிடும். அனல் பறக்கும். உடல் தகிக்கும். அப்போதெல்லாம் உறுதியோடு சமாளித்துப் பழக்கப்பட்டிருக்கிறான். அதனால் பல்லைக் கடித்துக்கொண்டு அதைவிட்டு நடக்கத் தொடங்கினான். கூட்டத்தில் ஒரே அமைதி குடிகொண்டிருந்தது. கற்பூரம் மட்டும் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். எல்லோருமே அவனுக்கு ஆவேசம் வந்துவிடும் என்று எதிர்பார்த்தார்கள். நல்லவேளையாக அப்படியொன்றும் ஆகவில்லை.

அமைதியைக் கிழித்துக்கொண்டு சிரஞ்சீவி போட்ட சப்தம் மட்டும் பஞ்சாயத்தாரை ஆத்திரத்திற்காளாக்கியது. "மாலை கொண்டாங்க! மாலை கொண்டாங்க! கரகமாடிக் கண்ணனுக்கு ஜே போடுங்க! செத்த பாம்பை அடிக்கும் விராதி வீரனுக்கு ஜே! ஜே! ஜே!" என்று சிரஞ்சீவி கத்தி, அதற்குப் பரிசாகத் தந்தையிடம் ஒரு முரட்டுக் குட்டும் தலையில் பெற்றுக்கொண்டான்.

இத்தனை வேதனையான வேடிக்கைகளையும் பார்த்துக்கொண்டிருந்த அறவாழியின் உள்ளம், இயற்கையாகவே சிங்காரத்தின் பின்னால் ஊர்ந்திடத் தொடங்கியது. சிங்காரத்தின் உருவம் சித்தரிக்கிற குணாதிசயமும் அவன் நடவடிக்கை காட்டுகிற குணாதிசயமும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு அறவாழியைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டன. அந்த அதிசயமான மனிதனைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமென அறவாழி முடிவு செய்துகொண்டான்.

சிங்காரம் தெருக்கோடி திரும்பும் வரையில் காத்திருந்துவிட்டு, அவன் திரும்பியதும் அவனைப் பின்தொடர்ந்து நடக்க ஆரம்பித்தான். அவன் நேரில் கண்ட விசித்திரமான காட்சிக்கு எப்படியாவது விளக்கம் பெற்றாக வேண்டுமென்ற ஆசை அலைமோதிற்று. சிங்காரமோ தெருவில் எங்கும் நின்றானில்லை. எந்த வீட்டிலும் நுழைந்தானில்லை. எந்த இடத்திலும் உட்காரவும் இல்லை. மெதுவாக எங்கேயோ போய்க்கொண்டிருந்தான். அதே வேகத்தில் அறவாழி அவனைத் தொடர வேண்டியதாயிற்று.

சிங்காரத்தின் இருதயத்திலே எத்தனை பயங்கரமான சுழற்சிகள்! சூறாவளிக் காற்றும்—இடியும் மின்னலும்—பெரு மழையும்—பூகம்ப அதிர்ச்சியும்—இவைகளுக்கிடையே ஒரு தாயில்லாக் குழந்தையும்போல—அவன் இருதயம் ஒலியெழுப்பிக்கொண்டிருந்தது. சிணுங்கி அழும்—'வீர், வீர்' எனக் கத்தும்—செறுமும்—'கோ'வெனக் கதறும்—இப்படிப் பலவித அழுகையுடன் அவன் உள்ளம் துடிதுடித்துத் தவித்தது. எந்தத் தங்கையை அவமானகரமான வார்த்தையால் அந்தக் கண்ணன் திட்டினானோ; அதே தங்கை அதே கண்ணனிடம் தன்னை ஒப்படைத்துவிடத் துணிந்துவிட்டாள்—துணிந்தது மட்டுமல்ல; அண்ணனைவிட அந்த அயோக்கியனே பெரியவன் என்று வாதிடவும் தைரியம் பெற்றுவிட்டாள்—அதோடு மட்டுமல்ல; அவனை அண்ணன் அடிக்கக் கூடாது—ஆனால், அண்ணனை அவன் மனம் போனவாறு தாக்கிக் கொல்லவும் செய்யலாம் என்ற அளவுக்குத் தன் மனசைக் கல்லாகவும் மாற்றி சகோதர பாசத்திற்குச் சீட்டுக் கொடுத்து அனுப்பிவிட்டாள். இந்த அநியாயமான மாறுதலை—திடீர் அதிர்ச்சியைத் தீச்சட்டி சிங்காரத்தால் எப்படித் தாங்கிக்கொள்ள இயலும்.

தங்கை கற்பூரத்தைக் கண்போல் காத்தவன். தந்தையும், தாயும் தங்கள் மரணத் தறுவா

யில் அவனிடம் பெற்ற வாக்குறுதியே கற்பூரத்திற்கு எந்தவித மனத்தாங்கலும் வராமல் அவள் இஷ்டப்படி நடத்த வேண்டும் என்பதுதான். அதோடு இன்னொரு சத்தியத்தையும் அவன் தந்தை அவனிடம் ரகசியமாகப் பெற்றிருக்கிறார். அதை நினைக்க நினைக்க அவன் நெஞ்சு நெருப்புபட்ட புண்போல ஆயிற்று. மார்பகத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டான்—அவனையும் மீறி இருதயமும் சுவாசப்பைகளும் காற்று தாங்காத பலூனைப் போல வெடித்துவிடும் பீதி அவனுக்கு!

கடைசியில், எங்கேதான் போய் அவனது கால்கள் நிற்கப் போகின்றன? இந்தக் கேள்வியோடு அறவாழி பின்சென்றுகொண்டிருந்தான்.

அதோ அந்த வேப்பமரம்! சிங்காரம் அங்கே போய் நின்றான். அறவாழி, தூர இருந்து கவனித்தான். சிங்காரம், தலையை நிமிர்த்தி மரத்தின் கிளையை அண்ணாந்து பார்த்தான். அவ்வளவுதான்—அவன் இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்த வேதனையைத் தனையும், மண்ணுக் கடியிலிருந்து எரிதழல் கிளம்பி வழிவதுபோல் பொங்கி வழியத் துவங்கிற்று. "அய்யோ, மைனா!" என்று முகத்தில் அறைந்து கொண்டு 'கோ' எனக் கதறி அழுதான் சிறு பிள்ளையைப் போல் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். வேப்பமரத்தின் அடிப்பாகத்தைத் தழுவிக்கொண்டு புலம்பினான்.

அறவாழிக்கு மேலும் வியப்பு ஏற்பட்டதே தவிர, விளக்கம் கிடைக்கவில்லை. அருகே சென்று தீர விசாரித்துவிடுவது என்று தீர்மானித்தான். மரத்தடிக்கு வந்தான். தன்னையறியாமல் அழுதுகொண்டிருந்த சிங்காரத்திற்குத் தன் தோள்பட்டையில் யாரோ கைவைத்திருப்பது வெகு நேரத்திற்குப் பின்பே தெரிந்தது. யார் என்று அறிய திரும்பிப் பார்க்கக்கூட அவன் நினைக்கவில்லை போலும்—கண்ணனாகத்தான் இருக்கும் என அவனே முடிவு கட்டிக் கொண்டானோ—அல்லது அப்படி ஒரு திடீர் உணர்ச்சி அவனை நினைவிழக்கச் செய்ததோ—எப்படியோ 'சரே'லெனத் திரும்பியதும் திரும்பாததுமாக அறவாழியின் கன்னத்தில் ஒரு குத்து விட்டான். அறவாழி, வலி தாங்க முடியாமல் தன் முகத்தைப் பொத்திக்கொண்டு பின்னுக்கு நகர்ந்தான் அதன் பிறகுதான் சிங்காரத்திற்குத் தான் தவறு செய்துவிட்டோமென்பது புரிந்தது. கண்ணனால் புண்ணாகிவிட்ட அவன் உடல் வேதனைகூட அப்போது மறந்துபோயிற்று. அறவாழியின் முகத்தைப் பார்த்துக்கொண்டே நின்றான் அந்தப் பார்வையில் மன்னிப்புக் கேட்கும் ஜாடையிருப்பதை அறவாழி உணராமல் இல்லை.

"கவலைப்படாதே! எனக்கும் இந்த ஊருக்கும் சரியான பொருத்தம்—வந்ததும் வராததுமாக சரியான வரவேற்பு! நல்ல அடி—உதை—குத்து—முட்டு- பிரமாதமான உபசரிப்பு! மகத்தான உபசரிப்பு!" என்று சிரித்துக் கொண்டான் அறவாழி.

சிங்காரத்திற்கு முழு விபரமும் புரியாவிட்டாலும், அறவாழி, தன் மீது கோபப்படவில்லையென்பதை அவன் பேச்சிலே காணப்பட்ட மென்மையிலும் இனிமையிலும் தெரிந்து கொண்டான். அருகே சென்று அவன் கன்னத்தைத் தடவிக் கொடுத்து, "தவறுதலாக ஆத்திரத்தில் அடித்துவிட்டேன்-மன்னிச்சிடு தம்பி!" என்று தழுதழுத்த குரலில் கெஞ்சினான்.

அறவாழிக்கு விழிகளில் நீர் துளிர்த்தது. அவனும், சிங்காரத்தைத் தழுவியவாறு, வேப்பமரத்து மேடையில் அமர்ந்தான்.

"நீ ஒரு அதிசயமான மனிதன்!" என்றான் அறவாழி.

"என்னைவிட நீதான் தம்பி பெரிய மனுஷன்!" என்று அவனைத் தட்டிக் கொடுத்தான் சிங்காரம்.

"ஆமாம்—இதுவரையில் நடந்த விநோதமான நிகழ்ச்சிகளுக்கு நான் காரணம் புரிந்துகொள்ளலாமா?" என்று ஆவலாகக் கேட்டான் அறவாழி. சிங்காரத்தால் பேச முடியவில்லை. ஆனாலும் தன் இருதயச் சுமையை யாரிடமாவது உடனடியாக இறக்கிவிட வேண்டும் போலிருந்தது.

"அந்தத் தெருவிலே நடந்த சண்டை ஆரம்பத்திலேயிருந்து நீ என்னைக் கவனித்து வருகிறாயா?"

"ஆமாம் — உன்னைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்று நான் கண்ட உன் புதுமையான போக்கிற்கு என்னால் காரணம் கண்டு பிடிக்கவே முடியவில்லை."

"என்னைக் கை வலி யெடுக்கிறவரை தாக்கினானே அவன் தான் கரகமாடிக் கண்ணன்!"

"அவனை எனக்கு நன்றாகத் தெரியும் — அவனைப் பற்றிய கதையை நானே உனக்கு சொல்வேன்."

"அவன் எனக்குப் பரம விரோதி—என் தாயின் கர்ப்பத்தில் நான் ஜெனிப்பதற்கு முன்பே அவன் வீட்டுக்கும் என் வீட்டுக்கும் செத்தால வாழ்ந்தால் கிடையாது என்கிற தூரத்துக்கு அவ்வளவு பகை! அவனை போயி என தங்கச்சி கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாளாம்—நியாயமா இது? நீயே சொல்!"

"காதலுக்குக் கண்ணில்லை யென்பார்கள்!"

"மூளையில்லை — அன்பில்லை— பாசமில்லை — மானமில்லை — ரோஷமில்லை — என்றெல்லாம் கூடச் சொல்லலாம் போலிருக்கிறது என் தங்கச்சியின் காதலைப் பார்க்கும்போது!"

"என்றைக்கோ பகைமை என்பதற்காக அதை எப்போதும் பாராட்டிக் கொண்டிருக்கலாமா? புலியும் பசுவும்கூட ஒரு குளத்தில் ஒரே துறையில் தண்ணீர் குடித்தன என்று புராணங்களில் படிக்கிறோம்!"

"அட சும்மா இரப்பா! அது நொண்டிப் புலியா இருக்கும்—அதனாலதான் பாயமுடியாம ஆகியிருக்கும் — இல்லேன்னா மாட்டு ரத்தத்தைக் குடிச்சுத்தான் அது தாகம் தணிச்சிகிட்டுப் போயிருக்கும்!"

"அய்யய்யோ......! நீ என்னா புராணத்தையே மறுத்துப் பேசுகிறாயே — அது பாபமாயிற்றே?"

"புராணமாவது மண்ணாங்கட்டியாவது — நான் எல்லாத்தையும் மறுப்பேன் — எல்லாத்தையும் கொண்டாடுவேன்— என் மனசுக்கு எது சரின்னு படுதோ அதைச் சொல்றதுக்குப் பயப்படவே மாட்டேன். நான் ஒண்ணும் பக்தனும் அல்ல—பரம பாதகனும் அலல! என் பிழைப்பே ஊரை ஏமாத்துற பிழைப்பு! ஆனாலும் அந்தப் பிழைப்பு சரியா நடக்கிறதுக்குக் காரணம் கடவுள் அருள்தான்; காளிகாதேவி கருணைதான் அப்படிங்கிறத்தில எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையிருக்கு. தெய்வம் கொஞ்சம்தான் வழிகாட்டும் — அதுக்குமேல நடந்து போக வேண்டியது நம்ப கடமைதானே! ஊருக்குப் பாதை காட்டுகிற கைகாட்டி மரம், கூடவே துணைக்கு வருமா என்ன?

சிங்காரம், தன் மனதில் உள்ளதை யெல்லாம் கோர்வையில்லாமல் அடுக்கிக் கொண்டு வருவதைக் கண்ட அறவாழி, அவனோடு மேலும் பேச்சுக் கொடுத்து அவனைப் பற்றிய விபரங்களை அறியலாம் என்ற நம்பிக்கை கொண்டான்.

"உன் வாழ்க்கையிலே கடவுள், கைகாட்டி மரமாகவாவது நின்று வழிகாட்டியிருக்கிறார். ஆனால் பல அனாதைகளுக்கு அவர் தூக்கு மரமாக உருவமெடுத்து மேல் உலகத்திற்குதான் வழிகாட்டியிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்!"

—அறவாழி, சாவதானமாக இதைச் சொன்னதும் சிங்காரம் குழப்ப மடைந்தான். 'தூக்குமரம்' என்ற வார்த்தை காதில் விழுந்ததும் மைனாவும், அவள் தொங்கிய மரக் கிளையுந்தான் அவன் மனக்கண் முன்னே தோன்றி மறைந்தன. "மைனா!" என்று ஒருமுறை சொல்லிக் கொண்டான்.

"யார் அந்த மைனா? அவளுக்கும் இந்த மரத்திறகும் என்ன தொடர்பு? ஒருவேளை அவள்...?" என்று கேள்வியைச் சற்று நீட்டினான் அறவாழி.

"அவளா? அவள்தான் என் வாழ்க்கையிலே முதலாவதாகவும் கடைசியாகவும் பிரவேசித்து என்னை இப்படி நாசமாக்கி விட்டவள்!" என்று மறுபடியும் அழுதிட ஆரம்பித்தான் சிங்காரம்.

"அவள் உன் காதலியா?"

"அதைப்பற்றிப் பேசி என்னை இன்னும் அழவிடாதே—நான் போகிறேன்; முடிந்தால் நான் கொஞ்சம் வெறி யடங்கியிருக்கும்போது என்னை சந்திக்கவா! இப்போது என்ன பேசுகிறேன் என்று எனக்கே புரியவில்லை. முக்கியமாக என் வாய் பேசுவது என் காதிலே விழவில்லை யென்றால் பாரேன்!" என்று சொல்லி விட்டு எழுந்தான் சிங்காரம்.

வேதனைக் களமாகி விட்ட உள்ளம், அவனை நிலைதடுமாறச் செய்கிறது எனப் புரிந்து கொண்ட அறவாழி, அவனைப் போகவிடாமல் தடுத்துப் பக்கத்திலேயே உட்கார வைத்துக் கொண்டான்.

"மைனாவைப்பற்றி நான் ஏதும் கேட்கவில்லை! அதைக் கேட்டால் தானே உனக்கு விசாரம் பிடிக்கிறது, அதிகமாக! உன் தங்கையைக் கண்ணன் திருமணம் செய்து கொள்வதில் உனக்கென்ன தடை? அதைச் சொல்!" எனக் கேள்வி போட்டான்.

"அவன் எப்படிப்பட்டவன் என்பதை நீயே நேரில் கண்டாய் எந்த அண்ணனாவது இதுபோன்ற ஒரு ஈனப்பிறவிக்கு — கடைந்தெடுத்த அயோக்கியனுக்குத் தன் தங்கையைக் கொடுத்து அவளைப் பாழாக்குவானா?"— சிங்காரம் பதில் இது!

"சரி—உன்னையும் மீறி அவள், அவனையே திருமணம் செய்து கொண்டால்?"

"தங்கையின் மனங் கோணாமல் நடக்கவேண்டும் என்ற தகப்பனாரின் வாக்குறுதியைக் காப்பாற்றுவேன் — ஆனா இதன் மூலம் அவருக்களித்த இன்னொரு உறுதியைக் காற்றிலே பறக்க விட்டுவிடுவேன். அப்படி பறக்கவிட்ட பிறகு எனக்கேன் வாழ்க்கை? நானும் என் மைனாவுடன் போய்விடுவேன்!"

"அப்படி யென்ன தந்தையிடம் உறுதி அளித்திருக்கிறாய்?"

"கரகமாடிக் கண்ணனின் அப்பன் — அது தவறினால் அவன் மகனாகிய இந்தக் கண்ணன் — இருவரில் ஒருவரைக் கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கழுதையில் ஏற்றி ஊர்வலம் விடவேண்டும் என்பதே அந்த உறுதி! அவன் அப்பன் தப்பித்துக்கொண்டான் — மகனுக்காவது அந்த விழாவை நடத்தலாம் என்று வெகு நாளாக நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதற்குள்ளேதான் இபபடி வந்து விட்டது!"

"ஏ அப்பா—எவ்வளவு பயங்கரமான சபதம்! ஏன இப்படியொரு உறுதி யெடுக்கவேண்டும்? அப்படி என்ன அவர்கள் குற்றம் செய்துவிட்டார்கள்?"

"அய்யோ — அந்தக் குற்றத்தைச் சொல்வதற்கே நாக்கு கூசுகிறது. தயவுசெய்து என்னைக் கேட்டுத் தொந்திரவு பண்ணவேண்டாம்!"

அறவாழிக்கு ஆவல் அடங்கவில்லை. எடுத்துக்கொண்டிருக்கிற சபதமோ பயங்கரமாயிருக்கிறது; பழி வாங்க வேண்டுமென்ற உணர்ச்சியோ கொந்தளித்துக் கிளம்புகிறது; அதற்கான காரணத்தை மட்டும் புரிந்துகொள்ளாமல் போய்விட முடியுமா என்ன? தானோ அதிகமாக அறிமுகமாகாதவன். மேலும் வறபுறுத்திக் கேட்கவும் சிறிது பயமாக இருந்தது. இருந்தாலும் உடனே தளர்ந்துவிடாமல், "நான் உனக்குப் பழக்கப்பட்டவன் அல்ல; என்றாலும் ஏதோ ஒரு உணர்வு, உன்பால் இழுத்து விட்டது. உன் கதையைக் கேட்கவேண்டும் போலிருக்கிறது. உன் கண்ணீருக்குக் காரணம் அறிய வேண்டும்போல் உள்ளம் துடிக்கிறது. உன் சபதத்தை நினைத்தாலே நடுக்கம் பிறக்கிறது? ஆனால் சபதம் எழுந்த விதத்தை மட்டும் கூற மறுக்கிறாய்! இது நியாயமல்ல—என்னை நீ நம்பலாம்—தயவு செய்து சொல்லு — எவ்வளவு பெரிய ரகசியமாக இருந்தாலும் அதைக் காப்பாற்றுவது என் பொறுப்பு!" என்று சொல்லால் அவனை வளைத்துவிடத் தீர்மானித்தான் அறவாழி.

சிங்காரம் வாய் திறக்கவில்லை. அறவாழியையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். தூரத்திலிருந்து புல்லாங்குழலின் ஒலி காற்றிலே மிதந்து வந்து கொண்டிருந்தது.

தொடரும்

திருவாரூர் மாநாடு சிறப்பு மலர்.

★

அறிஞர் அண்ணா அவர்கள் ஆரூர் மாநாட்டில் கழகத்தின் நடவடிக்கைகள்—நிகழ்ச்சிகள் — அனைத்தும் என்றென்றும் நிலைத்திருப்பதுபோலவும், ஏனையோர் உணர்ந்து கொள்ளவும் ஏற்ற வகையில் தொகுத்தளிக்கப்படுதல் வேண்டுமெனச் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

அதனையொட்டி முரசொலி வெளியீடாக திருவாரூர் மாநாட்டுச் சிறப்பு மலர் தயாராகிவருகிறது.

அதில் :

★ கிளைக் கழக விபரங்கள்—கிளைக் கழக செயற் குழுவினர் பெயர்கள்—

★ மாநாட்டிற்கு அலங்கார வண்டிகள் அமைத்து வந்த கழகங்களின் விபரங்கள்—

★ நிதிக் கூட்டங்கள் நடத்திய ஊர்களின் விபரம்—

★ தனி நன்கொடை அளித்த கழகங்களின் பெயர்களும் மலரில் இடம் பெறுகின்றன; பாராட்டுதலோடு!

★ இதுவரையில் வெளிவராத புகைப் படங்கள் பல இடம்பெறுகின்றன. திரைப்படம் எடுக்கப்பட்ட "பிலிமி"லிருந்து தனியாகத் தயாரிக்கப்பட்டுள்ள நிழற் படங்கள் மலர் முழுதும் திகழும்.

★ மூவண்ண முகப்பு—புதிய கட்டுரைகள்—கவிதைகள்—அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர், கழக முன்னணி வீரர்கள் தருகின்ற மாநாட்டுப் பாராட்டுரைகள்!

★ இன்னும் தோழர்கள் எழுதியனுப்புகிற சுவைமிக்க மாநாட்டு நிகழ்ச்சித் துணுக்குகள்!

இத்தனை சிறப்புடன் இருபதாம் தேதி உங்கள் நகரில் கிடைக்கும்.

விலை 8 அணா

(கழிவு 25 சதவிகிதம்)

[விற்பனையாளர்கள் உடனே தேவைக்கு கழிவு நீங்கிய முன்பணத்தை அனுப்ப வேண்டுகிறோம். தனிப் பிரதி தேவையானோர் 60 புதுக் காசுகளுக்கு தபால் தலைகள் அனுப்ப வேண்டுகிறோம்.]

—நிர்வாகி, முரசொலி

கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர்- மாவட்டப் பிரதிநிதிகளுக்கு

சுற்றறிக்கை.

★

அன்புடையீர், வணக்கம்.

நாளது ஜூலை திங்கள், 5, 6 (சனி, ஞாயிறு) நாட்களில் கோவை மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாடு கோபிச்செட்டிப் பாளையம் வி. பி. ராசு நகரில், அர்ச்சுனன் பந்தல், நாகம்மையார் அரங்கில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

மாநாட்டுக்குத் தலைவராக ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. அவர்களும், திறப்பாளராக ஆர். தர்மலிங்கம் எம். பி. அவர்களும் வருகின்றார்கள்.

மாநாட்டில் அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், மற்றும் தி. மு. கழகத் தலைவர்கள் அனைவரும், கலை உலக திராவிடக் காவலர்களும், மராட்டிய, வங்காள நாட்டு மக்கள் மன்ற உறுப்பினர்களும் வருகை தருகின்றார்கள்.

மாநாடு வெற்றியுடனும் சிறப்புடனும் நடைபெற ஒவ்வொரு கிளைக் கழகச் செயலாளரும், கழகத் தோழர்களும் பெரிதும் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

1. கிளைக் கழக நன்கொடை ரூ. 10—0—0 உடன் அனுப்பித்தர வேண்டுகிறோம்.

2. மாவட்டப் பிரதிநிதி வரவேற்புக் குழுக் கட்டணம் ரூ. 5. மாநாட்டுப் பிரதிநிதியாக ஒவ்வொரு கிளைக் கழகமும் செயலாளருடன் மற்றொருவரையும் தேர்ந்தெடுத்து, மாநாட்டு பிரதிநிதிக் கட்டணம் ஒருவருக்கு ரூ. 3—0—0 வீதம் இருவருக்கும் ரூ. 6—0—0 அனுப்ப வேண்டுகின்றோம். வசதியும், ஆர்வமுமுள்ள கழக உறுப்பினர்கள் ரூ. 10—0—0 அனுப்பி வரவேற்புக் குழுவில் சேரலாம்.

3. ஒவ்வொரு கிளைக் கழகமும், தங்கள் ஊர்களில் உள்ள தி. மு. கழகத் துணை அமைப்பு மன்றங்களின் விபரங்களை அறிவிப்பதுடன், ஊர்ப் பெரியவர்கள், பிரமுகர்கள், வியாபாரிகளிடம் நன்கொடை வசூல் செய்துஅனுப்ப வேண்டுகின்றோம். ஒவ்வொரு முனிசிபல் நகரங்களும் சிறப்புச் சொற்பொழிவு மூலம் நிதி திரட்ட ஏற்பாடு செய்ய வேண்டுகின்றோம்.

விளம்பரம்

4. ஒவ்வொரு கிளைக் கழகங்களும், மாநாட்டு வரவேற்புக் குழுவினர் அனுப்பும் நோட்டீஸ்கள்—சுவரொட்டிகளை நல்ல முறையில் பயன்படுத்துவதோடு, துண்டு வெளியீடுகள்—சுவரில் விளம்பரம் எழுதுதல்—மெகபோன் மூலம் அறிவித்தல் ஆகியவைகளைக் கிளைக் கழகங்கள் தங்கள் முயற்சியில் செய்வதுடன், ஜூன் கடைசி வாரத்தில் 28, 29 (சனி, ஞாயிறு) நாட்களில் மாநாட்டு விளம்பரப் பொதுக்கூட்டங்களை உள்ளூர் தோழர்களை வைத்து நடத்த வேண்டுகின்றோம்.

5, ஒவ்வொரு கிளைக் கழகங்களும் தங்கள் கழகப் பெயர் அமைத்த கொடிகள் இரண்டேகால் அடி நீளம் ஒன்றரை அடி அகலத்தில் அனுப்பித்தர வேண்டுகின்றோம். தீர்மானங்கள் அனுப்புகின்ற தோழர்கள் 30—6—58 திங்கள்கிழமைக்குள் அனுப்பித் தர வேண்டுகின்றோம்.

6. மாநாட்டுக்கு ஒவ்வொரு கிளைக் கழகமும் தொண்டர்களை அனுப்ப-தொண்டர் படைத் தலைவருக்கு கிளைக் கழகச் செயலாளரின் கையொப்பத்துடன் விண்ணப்பம் 15—6—58 ஞாயிறுக்குள் அனுப்ப வேண்டுகின்றோம். உடை, மேல்சட்டை (இடது பக்கம் சிவப்பு, வலது பக்கம் கருப்பு) என்ற முறையில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

7. கிளைக் கழகங்கள், வட்டக் கழகங்கள், ஊர்வலத்தை சிறப்புற நடத்த தங்கள் கழகங்களின் சார்பில் பெரிய நீள பேனர்கள், தலைவர்கள் படங்கள், பொன்மொழிகள், கழகக் கருத்துக்கள் தாங்கிய அட்டைகளுடன் வர வேண்டுகிறோம்.

8. மாநாடு சீரும், சிறப்புடன் நடைபெற, மாநாட்டில் பெரும் நிதி மிச்சப்பட கழகத் தோழர்கள் தங்களால் இயன்ற அளவு ஒத்துழைத்து கோவை மாவட்டத்தின் பெருமையை கட்டிக் காத்து வளர்ச்சியடையச் செய்ய வேண்டுகின்றோம்.

தங்களன்புள்ள,

ப. நாராயணன் வ. கு. தலைவர்.

ஈ. வே. கி. சம்பத் எம்.பி. பொருளாளர்.

எஸ். அப்பாவு, பி. ஏ. சாமிநாதன்
செயலாளர்கள்.

கே. எஸ். எஸ். சீரங்கராயர்,
ஜி. கே. பழனிச்சாமி,
(தொண்டர் படைத் தலைவர்கள்.)

ஜி. ஏ. வேங்கடாசலம்,
விளம்பரப் பொறுப்பு.

பருந்து அங்கே- பாணம் இங்கே!

"இன்றைய தினம் அன்பர் வெங்கிடங்கால் சந்தானம் அவர்களின் அரிய முயற்சியாலும், மற்ற தோழர்களின் ஒத்துழைப்பாலும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான ஒரு புதிய — சிறிய— எழிலகத்தைக் கட்டி முடித்திருக்கிறார்கள். அவர்களுடைய இந்த அரிய முயற்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"ஏனெனில், கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் தோழர் சந்தானத்தைப் போன்ற வசதியும், வாய்ப்பும் உள்ள தோழர்கள் இப்படி தொல்லைகளை அனுபவிக்கின்ற — அடக்குமுறைகளுக்கு ஆட்படுகின்ற—மாற்றாரால் தூற்றப்படுகின்ற ஓர் இயக்கத்திலே இருக்க மாட்டார்கள். எங்கேயாவது ஒரு கோயிலுக்குத் தர்மகர்த்தாவாகி, மாலை நேரத்திலே ஆயிரங்கால் மண்டபத்திலே அமர்ந்து, நாயன இசையை அனுபவித்துக் கொண்டு, நயனத்திற்கும், நரம்புக்கும், நாடிக்கும் சூடேற்றிக் கொண்டிருப்பார்கள்.

"தலைமை வகித்த மாறன் குறிப்பிட்டதைப்போல், அண்ணாந்து பார்த்தால் கழுத்தை வலிக்கும் அளவிற்கு உயரமான கட்டிடம் அல்ல இது! ஆனால் இதற்குப் பின்னே இருக்கிற கழகத்தின் இலட்சியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ற வகையில் படிப்பகம் ஒன்றை இங்கே அமைப்பார்கள் என்று நம்புகிறேன்.

"நமது கழகத் தோழர்களுக்கு ஒன்று கூறிக் கொள்வேன்; மாற்றுக் கட்சிக்காரர்கள் கழகத்தைப் பற்றி என்ன கூறிவருகிறார்கள் என்பதை அதிகம் கவனித்து; நமது சிந்தனையைச் சிதறவிடாமல், நமது இலட்சியத்திலேயே குறியாக இருக்கவேண்டும். இதற்கு உதாரணமாக பாரதத்திலிருந்து ஒரு கதையைச் சொல்வேன்.

"துரோணாச்சாரியார் தன்னிடத்தில் வில்வித்தை பயின்ற அரச குமாரர்களின் திறமையைப் பரீட்சிக்கக் கருதி, ஒரு நாள் அவர்களை ஒரு மரத்திற்கு எதிரில் நிற்கவைத்து, அந்த மரத்தின் உச்சியிலிருந்த வல்லூறைக் காண்பித்து ஒவ்வொருவரையும் அழைத்துக் கேட்டார்!

"வல்லூறு தெரிகிறதா?"
"தெரிகிறது"
"கிளை தெரிகிறதா?"
"தெரிகிறது"
"மரம் தெரிகிறதா?"
"தெரிகிறது"
"மரத்தின் அடிப் பாகம் தெரிகிறதா?"
"தெரிகிறது"

"சரி; அப்படியானால் உங்களில் எவரும் அந்தப் பறவையை அம்பினால் அடித்து வீழ்த்த முடியாது என்று கூறிவிட்டு, அர்ச்சுனனை அழைத்துக் கேட்டார்.

"வல்லூறு தெரிகிறதா?"
"தெரிகிறது"
"கிளை தெரிகிறதா?"
"தெரியவில்லை"
"மரம் தெரிகிறதா?"
"தெரியவில்லை"
"இலை தெரிகிறதா?"
"தெரியவில்லை"
"வேறு என்னதான் தெரிகிறது?"

"அந்த வல்லூறின் கழுத்தும், என் அம்பின் முனையும்தான் தெரிகிறது!"

"சரி, உன்னால்தான் அந்தப் பருந்தை அடித்து வீழ்த்த முடியும்" என்றாராம்.

"அதுபோல நமது தோழர்களுக்கு நமது இலக்கான டில்லி ஏகாதிபத்தியமும், நமது கொள்கையின் கூர்மையும்தான் தெரிய வேண்டுமே தவிர—மரம், கிளை, இலை — தெரியக்கூடாது!"

—என்று அறிஞர் அண்ணா அவர்கள் சென்ற 10—6—58 அன்று வெங்கிடங்கால் (தஞ்சை மாவட்டம்) தி. மு. கழகக் கிளையின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

தோழர் சந்தானம் அவர்களின் அரிய முயற்சியால் அந்தச் சிற்றூரில் எழும்பியிருக்கும் அந்தக் கொள்கைக் குடிலின் திறப்புவிழா தோழர் முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் மு. க. அவர்களும் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றிய அன்றைய தினம், அறிஞர் அண்ணா அவர்கள் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்கள். ✻

எதிர்பார்த்த இன்ப ஏடு! எமது புதிய வெளியீடு!!
திடுக்கிடும் சம்பவங்களைப் பின்னணியாகக்கொண்டு
பின்னப்பட்ட ஒப்பற்ற துப்பறியும் நாவல்!

உயிரை வாங்கிய உயில்

(ரா. வேங்கடசாமி) விலை ரூ. 1—25

முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை சாலை :: திருச்சி—8.

குறிப்பு:- தனிப் புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் 0—25 புதிய காசு சேர்த்து ரூ. 1—50 எம். ஓ. அனுப்புக.

காரிருளில் ஒரு மின்னல்! இந்தியின் ஆதிக்கம் சரிகிறது!!

திமிர் பிடித்த டில்லித் துரைத்தனம், செங்கோல் தன் கையிலே சிக்கி இருக்கின்றதென்ற மமதையால், சங்கத் தமிழ் தவழும் தமிழகத்தின் மீது, இந்திய உப கண்டத்தின் ஒரு சாரார் மட்டுமே பேசும் இந்தி மொழியைக் கட்டாயமாகத் திணிக்க எல்லா முனைகளிலும் முயற்சித்து வருகிறது.

வடநாட்டு மாநிலங்களாம்—உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மட்டுமே பேசப்பட்டு வரும் ஒரு மொழி — போற்றிப் புகழத் தக்க சிறந்த இலக்கியமோ, தேவையான இலக்கணமோ, வார்த்தை வளமோ, கவிதை நயமோ அற்ற ஒரு மொழி—இந்தி! அந்த இந்தியைத்தான் மந்தி குணம் படைத்த மதி மந்திரிகள் செந்தமிழ் நாட்டின் சிங்காரக் கொலு மண்டபத்தில் அமரச் செய்ய ஆவன செய்து வருகின்றனர்.

முக்கடல் சூழ — முக்கனி குலுங்க மூவேந்தரின் முதுகிலும், தோளிலும் தவழ்ந்து வளர்ந்த முத்தமிழ் சிதைந்து சீரழிந்து செல்வாக்கிழந்து மூலையிலே அமரும் நிலை ஏற்படும் — எருமை புகுந்த செந்நெல் வயலாகும் — இந்தி இந்நாட்டிலே நுழைந்தால் என்றுணர்ந்த தமிழகத் தலைவர்கள் வடநாட்டுப் பேரரசின் ஆணவப் போகைத் தெரிந்து கண்டனக் குரல் எழுப்பினர். சங்க இலக்கியம் படைத்த தங்கத் தமிழுக்கே பங்கம் வந்திடில் பச்சை இரத்தம் பரிமாறிடுவோம்—தலைகளை விலைகளாகக் கொடுத்தேனும் தறுதலைகளிடமிருந்து எங்கள் தாய் மொழி காப்போம்—எனச் சூள் உரைத்தது மொழி காக்கும் பட்டாளத்தின் பாசறையாம் திராவிட முன்னேற்றக் கழகம்! இப்படை புறப்பட்டால் நமது ஆட்சி பொடிப் பொடியாகிவிடும் என்று உணர்ந்த டில்லித் துரைத்தனம் தனது முறையை சிறிது மாற்றிக் கொண்டு-மறைமுகமாக இந்தியை நுழைக்கத் திட்டமிட்டது!

நேருக்கு நேரில் நின்று சமர் புரிய முடியாத கோழை—ஏமாந்த நேரத்தில் முதுகில் தாக்கி வீழ்த்த முனைவது போல, அஞ்சல் அட்டைகளிலும், உரைகளிலும், பணம் அனுப்பும் நமூனாக்களிலும் இந்தி மொழியைப் பொறித்துப் பரவச் செய்யலாயினர், விழியற்றவர்கள்தானே தமிழகத்தார் என்ற நினைப்பில்!

விழியினும் மேலாக மொழியைக் காக்கும் தமிழக மக்கள் வீறுகொண்டெழுந்தனர். நேரு துரைத்தனத்தின் துடுக்குத்தனத்தைக் கருவிலேயே சிதைக்கவேண்டுமெனக் கண்டனக் குரலை எழுப்பினர். நாட்டை ஆளும் நயவஞ்சகர்களின் நரிச்செயலைப் பார் முழுதும் பறைசாற்றி — தமிழ் மாதாவின் திருமேனியிலே படிந்த இக்கறையை இரத்தம் சிந்தியேனும் துடைக்கப்படை புறப்படும் என எச்சரித்தோம், நாம்!

அஞ்சல் அட்டையிலும் இன்னும் பிறவற்றிலும் இந்தி மொழியைப் பொறிப்பது இந்திய அரசியல் சட்டத்தில் கண்டுள்ள விதிகளுக்கு முரணானது என்பதையும் சுட்டிக்காட்டினோம்!

இந்த வக்ர புத்திக்காரர்களின் அக்ரமச் செயலுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும் என்று மக்கள் பேரவையில் வீற்றிருக்கும் நமது பிரதிநிதியாம் சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் குடியரசுத் தலைவரிடம் வலியுறுத்தினர்.

நமது கண்டனக் குரல். நாடெங்கிலும், பட்டிதொட்டிகளிலும் எழுந்தன. ஆளாக்காதினர் காதிலும் விழுந்தது நமது குரல்! 1939-ம் ஆண்டு இந்த நாட்டிலே ஆச்சாரியாரின் துணைகொண்டு புகுந்த இந்தி பட்டபாட்டை — பெற்ற பாடத்தை உணர்ந்த ஆளவந்தார்கள், 'தூங்கும் புலியை எழுப்பவேண்டாம்' என்ற முடிவிற்கு வந்திருப்பதாகத் தெரிகிறது!

சில நாட்களுக்கு முன்பு கோவை இந்திப் பிரச்சார சபையில் பேசிய மத்தியப் பேரரசின் மந்திரியான உமாயூன் கபீர் அஞ்சல் அட்டைகளையும், உரைகளையும், பணம் அனுப்பும் நமூனாக்களையும், அவைகளை விநியோகிக்கும் பகுதிகளில் வழங்கும் மொழிகளிலேயே வெளியிட வேண்டும் என இந்தியப் பேரரசு கட்டளை பிறப்பித்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நமது கண்களை உறுத்திக் கொண்டிருந்த இந்தி, அஞ்சல் அட்டையில் இருக்காது இனி!

அங்கே தமிழ் மொழி இடம் பெறும்!

டெல்லியின் ஆணவம் சரிகிறது!

இந்தி வெறியர்களின் கொட்டம் தவிடுபொடியாகிறது!

இதை நினைக்கும் தோறும் நமது நெஞ்சம் இனிக்கிறது; இதயம் விம்முகிறது, பெருமையால்!

ஏனெனில் இந்தித் திணிப்பை எதிர்த்து முதல் குரல் எழுப்பிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தையே சாரும். ஆகவே இவ்வெற்றி — நமது வெற்றி! நாம் மேற்கொண்டுள்ள இலட்சியபுரிப் பயணத்தின் முதல் வெற்றி!

'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்பதைப் போல்—நமது குரல் உயர உயர அரசாங்கத்தின் ஆணவம் சரிய ஆரம்பித்திருக்கிறது.

சட்டம் எங்கள் கையில்—

சிறைச்சாலையின் திறவுகோல் எங்கள் பையில்—

சுட்டுவிரல் அசைந்தால் சுட்டுத் தள்ள பட்டாளம், துப்பாக்கி, பீரங்கி, ஏராளம்; ஏராளம்—

இவர்களால் என்ன சாதிக்க முடியும் என்று எக்காள மிட்டுக் கொண்டிருந்த ஏகாதிபத்திய வாதிகளின் முதல் தோல்வி!

முதல் தோல்வி முற்றிலும் தோல்வி என்பர். அதுபோல் இந்த ஆணவக்காரர்கள் தோல்வியை அடுக்கடுக்காகத் தழுவத்தான் போகிறார்கள். விடுதலை வீரர்களின் விழிகளிலிருந்து கிளம்பும் கனல், சர்வாதிகாரிகளின் சாம்ராஜ்யத்தைத் தீய்த்துச் சாம்பலாக்கிவிடுமே!

தாயக விடுதலைப் பணியில் ஈடுபட்டுள்ள நமக்கெல்லாம் இவ்வெற்றி உற்சாகத்தை அளிக்கத்தான் செய்கிறது. அகம் குளிர்கிறது; முகம் மலர்கிறது. என்றாலும் நாம் பெரியதோர் பயணத்தை மேற்கொண்டுள்ளோம். நமது பயணத்திலே இது ஒரு கட்டம். இந்த வெற்றியிலே நெஞ்சைப் பறிகொடுத்திடாமல், நமது இலட்சியம் "திராவிடநாடு திராவிடருக்கே" என்பதை நினைவில் கொண்டு நமது நாடு நமக்காகும்வரை நமது பயணத்தைத் தொடருவோம்; அந்த இலட்சியபுரியை நோக்கி நாம் விரைய இந்த வெற்றி வழிகோலட்டும்! ஃ

பழுது எங்கே?

"இன்றைய நிலையில்—நமது நாட்டு முன்னேற்றத்திற்கு இப்படிப்பட்ட ஊழியர்கள்தான் தேவை! உங்களை எல்லாம் காணும்போது நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். சுதந்திரத்தைக் காக்கும் தன்னலமற்ற ஊழியர்கள் நீங்கள்!"

புன்சிரிப்பு தவழும் முகத்தோடு — பூரிப்பு நிறைந்த இந்த வாசகங்களை உதிர்த்திருப்பவர் அமைச்சர் பக்தவத்சலனார் ஆவார்கள்!

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சென்னையில் ஏற்பாடு செய்திருந்த 'மத்யம் சைனிக் பயிற்சி' முகாமில் ஊழியர்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்கள் அளித்தபோது இப்படிக் குறிப்பிட்டார் அவர்.

விழி நிறைந்த விழாக்கோலம்—'உழைப்பவர்! சுதந்திர பாரதத்தின் வெற்றிக்குப் பாடுபடும் பண்பாளர் என்ற அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றிடத் துடிக்கும் உள்ளத்தோடு காத்திருக்கும் ஊழியர்கள்—அந்தச் சூழ்நிலையில்தான் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார், அப்படி!

நாட்டு முன்னேற்றத்திற்கான ஊழியர்களைத் தயார் செய்கிறது தமிழ்நாடு காங்கிரஸ்!

'சுதந்திரத்தைக் காக்க தன்னலமற்ற சேவை செய்யும் ஊழியர்களே!' என்று வாய் நிறைய வாழ்த்துகிறார் அமைச்சர்!

ஆனால்......அதே சமயம்...இந்த மகிழ்ச்சிக் குரலோடு இழைந்து வரும் மற்றொரு வேதனைக் குரலையும் கேட்கத்தான் வேண்டியிருக்கிறது.

"எந்தவிதப் பதவியையும் விரும்பாத—காங்கிரசிடம் உண்மையில் பற்றுள்ளவர் என்று கருதத்தக்க — கட்சி வேலைகளுக்கு அயராது தொண்டாற்ற — நல்ல ஊழியர்கள் இன்று காங்கிரசில் ஒருவர்கூட காணமுடியவில்லையே......இதை நினைக்கும்போது மனம் மிகவும் வேதனைப்படுகிறது! அப்படிப்பட்ட ஊழியர் ஒரு மாவட்டத்துக்கு ஒருவராவது தேவை!"

—இப்படிக் குறிப்பிட்டது யார்? காங்கிரசின் எதிர்ப்பு அணியில் அமர்ந்திருப்பவரோ—ஆளும் கட்சியை எதிர்ப்பதொன்றே திட்டமெனக் கொண்டிருக்கும் எதிர்க் கட்சிகளின் முகாமிலே இருப்பவரோ—இப்படிப் பேசவில்லை!

இந்தக் குறை சொல்லும் குரலை எழுப்பியவர் மத்திய அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியாவர். சென்னைக்கு வந்திருந்தபோதுதான் இந்த] வெட்கக் கேடான செய்தியைச் சொன்னார்.

"தன்னல மற்ற ஊழியர்களே!" என்று ஒரு கூட்டத்தையே சுட்டிக் காட்டுகிறார் பக்தவத்சலனார்!

"மாவட்டத்திற்கு ஒரு ஊழியர்கூட கிடைக்கவில்லையே, காங்கிரசில்!" என்று ஏங்குகிறார் டெல்லி அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி!

இரண்டு முரண்பட்ட கருத்துக்கள் — பொறுப்புள்ள இருவரது வாய்களிலிருந்து கிளம்புகின்றன!

"யாருடைய பார்வையிலே பழுது?" என்றுதான் கேட்கத் தோன்றுகிறது!

அதற்கு விடை காணப் புறப்படுகின்ற நேரத்தில் பார்வை கெடாத எந்தக் கண்களும் நன்கு புரிந்து கொள்கிறது, பழுது பட்டிருப்பது காங்கிரஸ்தானென்று!

புதிய திட்டம் ஏதுமில்லை- பழைய திட்டத்திற்கும் ஆபத்து!

பசியெடுத்து பிளிறிக் கொண்டிருக்கிற யானைக்குப் பட்டாணிக் கடலைகள் இரண்டை உணவாக நீட்டியது போல்—

தொழில் வளம் குன்றி, அதனால் வாழ்க்கைத் தரம் சூம்பி, பாடுபடத் தெம்பிருந்தும் பாதை இல்லாது தவித்துக் கொண்டிருக்கும் தென்னகத்தில் நல்ல திட்டங்கள் இல்லையே என்ற வேதனைக் குரல் எழும்புகிற போதெல்லாம், "ஏன் இல்லை? அதோ, அந்தத் திட்டம் — இதோ, இந்தத் திட்டம்!......இன்னும் பல இருக்கின்றனவே, ஐந்தாண்டுத் திட்டத்தில்!" என்று சமாதானம் சொலலி வந்தனர் ஆட்சி பீடத்தினர்.

அப்படி எட்டளவோடு இருந்து—கற்பனைக் கண்களால் மட்டும்மே காணமுடிந்த திட்டங்களில் ஒன்றுதான், சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டமும்!

சேலம் மாவட்டத்தில் பூமிக்கடியில் இரும்பு சத்தும், அலுமினிய உற்பத்திக்குத் தேவைப்படும் பாக்சைட் பொருளும் நிரம்பக் கிடைக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, அவைகளைப் பயன்படுத்தும்வகையில், அப்பகுதியில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றினையும், அலுமினியத் தொழிற்சாலை ஒன்றினையும் துவங்கியாக வேண்டும் என நாம் பலமுறை வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

தொழில் துறையில் வடநாடு — தென்னாடு முறையே பெற்றுள்ள வளத்தையும், வரட்சியையும் எதோ கற்பனை செய்துகொண்டு நாம் பேசி வரவுமில்லை. தொழில் துறையில் இரண்டு பகுதிகளுக்கும் இருந்துவரும் உயர்வு—தாழ்வுகளை எவரும் மறுக்கத் துணியாத அளவில், தக்க புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம்.

இந்த நமது குற்றச்சாட்டை அவர்களால் மறுக்க முடியாத காரணத்தாலும், நமது குற்றச்சாட்டில அடங்கியுள்ள நியாயத்தை மறைக்க முடியாத காரணத்தாலும், 'வடக்கு—தெற்கு பேதம்வேண்டாம் — இந்தியா ஓரே நாடு — எந்தப் பகுதி தொழில் துறையில் முன்னேறியபோதிலும் அதன் பயன் நாடு முழுவதுக்கும் உரிமையுடையதாகும்' என்றெல்லாம் பொருந்தாச் சமாதானத்தைப் பேசத் தலைப்படலாயினர் ஆள வந்தார்கள்.

இப்படிப் பேசிவருவதுடனும் நின்றுவிடாமல், தென்னகத்தில் புதுப் புதுத் தொழில்கள் துவங்கப்படாததற்கு விசித்திரமான சில காரணங்களையும் இட்டுக் கட்டிக் கூறலாயினர்.

அக்காரணங்களில் முக்கியமானவை இரண்டு. எந்தத் தொழிலுக்கும் இன்றியமையாத் தேவையாக இருக்கக் கூடிய எரிபொருளான நிலக்கரி தென்னகத்தில இல்லாதிருப்பது ஒரு காரணம்— தேவையான அளவில் மின்சாரம் கிடைக்கப் பெருதது மற்ஞெரு காரணம் — என இரண்டு காரணங்களைக் காட்டினர்

குறிப்பிட்ட ஒரு தொழிலுக்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள், குறிப்பிட்ட பகுதியிலேயே கிடைக்கப்பெறவில்லை—எனவே, குறிப்பிட்ட தொழிலை அப்பகுதியிலேயே துவங்க முடியவில்லை என்று கூறிய கூற்று பொய்யானது என்பதை பொதுவாக ஜப்பானின் தொழில் வளத்தையும் எடுத்துக்காட்டி மறுப்புரைத்தோம். அம்மறுப்புக்கு மறுப்புரைக்க முடியாது ஆளவந்தார்கள் விழித்த விசித்திரத்தையே நாட்டு மக்கள் கண்டார்கள்.

ஜப்பானிலே இரும்பே கிடையாது; ஆனல் உலகத்தில் பெரிய நாடுகளுடன் போட்டியிட்டுக் கொண்டு, அது இயந்திரங்களைத் தயார் செய்கிறது!

சேலம் மாவட்டத்தில் மண்ணில் மறைந்து கிடக்கும் இரும்புச் சத்தைத் தொழில்படுத்துவதற்குரிய ஒரு தொழிற்சாலையைத் துவங்குவதற்குத் தேவையான மின்சாரமும், நிலக்கரியும் போதிய அளவில் கிடையாது எனக் கூறிவந்தவர்கள், இருந்தாற்போல் இருந்து, அதற்கு முன் எப்பொழுதும் சுட்டிக் காட்டாத புதுக்காரணமாக 'சேலத்தில் படிந்திருக்கும் இரும்புக் கனிப்பொருளில் இரும்புச் சத்து குறைவாக இருக்கிறது' என்று அறிவிக்க முன்வந்தார்கள்.

சேலத்து இரும்புக் கனிப் பொருளில் கலந்திருக்கும் இரும்பு, தரத்தில் குறைந்தது எனக் கூறத் துணிந்தது போலவே, அங்கு கிடைக்கப் பெறுவதும், அலுமினிய உற்பத்திககுத் தேவைபபடும மூலப் பொருளாக இருந்து வருவதுமான பாக்சைட, பதினைந்திலிருந்து இருபது ஆண்டுக் காலத்திற்குள் இல்லாதொழியக் கூடியது என்ற விந்தையான புதுக் கதை பேச மிஸ்ரா என்ற வட நாட்டு தொழிலதிபர் முன் வந்திருக்கின்றார்.

சேலத்தில் கிடைக்கப்பெறும் இரும்புக கனிப் பொருளிலுள்ள இரும்புச் சத்து தரத்தில் குறைந்தது—எனவே, அதற்கு ஒரு உருக்குத் தொழிற்சாலை தேவை இல்லை என்கிறது இந்தியப் பேரரசு.

இப்பொழுதோ, அங்கு கிடைக்கப்பெறும் பாக்சைட் பதினைந்திலிருந்து இருபதாண்டு காலத்திற்குள் தீர்ந்துவிடக் கூடியதாகும்—எனவே, சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்று நிறுவத்தேவையே இல்லை-என்கின்ருர் மிஸ்ரா என்ற இந்திய அலுமினிய நிறுவனத்தின் நிர்வாகி!

இது, இதுவரை எவராலும் கூறப்படாததும், கூறத் துணியாததுமான விந்தையான புதுக் கதையாகும்!

அவரது வாதத்தை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு விடுமேயானல், தென்னகத்திற்சென்று ஒதுக்குவதாகச் சொல்லப்பட்ட திட்டங்களில் ஒன்று குறைக்கப்படும்— அந்தக் கொடுமையை நினைத்துக் குமுறுவதைத் தவிர நம்மால் வேறென்ன செய்ய முடியும்?

●●●

பண்டித நேரு மீண்டும் ஒப்வெடுத்துக் கொள்ளப் போவதில்லையாம்! —'சங்கர்ஸ் வீக்லி'

ஆசிரியரும், அச்சடிப்பவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு